## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

## CC No.134/2019

2022ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14ம் நாள் புதன் கிழமை அரசுத்தரப்பு சாட்சி –01, திரு.ஜனகர் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56 வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. லதா, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர் : திரு.ஜனகர் வயது

த.பெ/ க.பெ. : தொழில்

ஊர் : சமயம் :

வட்டம் : சாதி :

மாவட்டம் :

**முதல் விசாரணை.**

நான் பிராஞ்சேரியில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். எதிரிகளை அடையாளம் காண்பதில் எதிர்தரப்பினருக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது. 19.07.2017 வருடம் மாலை 4 மணியளவில் சுடுகாட்டில் இருந்து ஊர் மக்கள் சேர்ந்து சுடுகாடு பிரச்சனை சம்பந்மாக பேசிக்கொண்டிருந்த போது எதிரி அறிவழகன் தெவடியா, குச்சிக்காரி என்று அசிங்கமான வார்த்தைகளால் என்னை திட்டி என்னை கட்டையால் என்னை தலையில் அடித்து காயம் ஏற்படுத்தி அதில் எனக்கு 14 தையல் போடப்பட்டது. அங்கே அருகேயிருந்த எதிரி தர்மலிங்கம், கட்டையால் என்னை அடிக்கவந்து பொது இடத்தில் வைத்து அவரும் என்னை உயிரோடு இருக்கக்கூடாது என்று சொல்லி தெவடியா, குச்சிக்காரி என்று அசிங்கமாக திட்டினார். அங்கிருந்த எதிரி கிருஷ்ணமூர்த்தியும் என்னை தெவடியா, குச்சிக்காரி என்று அசிங்கமாக திட்டி சுடுகாட்டில் இருந்த கட்டையை எடுத்து என்னை அடிக்க வந்தார் நான் தடுத்துவிட்டேன். ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமணைக்கு சிசிக்சைக்கு சென்றேன். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமணக்கு அனுப்பி வைத்தார்கள். மூன்று நாட்கள் மருத்துமணையில் சிசிக்சை இருந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **(புகார் வாக்குமூலம் அத.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய பணித்தபோது, குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்கள். அதனால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

ஒம்.
இரா.ராஜசேகரன்,பி.ஏ,பி.எல்,
குற்றவியல் நடுவர் நீதித்துறை எண்.1,
ஜெயங்கொண்டம்.